# பேரா. கரு. நாகராசனின் இராமானுச மாமுனிவர் காவியத்தில் வைணவத் தத்துவம்

**தா. சுகந்தி[1] & சு. மகேஸ்வரி[2]**

**[1]உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்னாங்கூர், வந்தவாசி**

**[2]உதவிப் பேராசிரியர், மேலாண்மையியல் புலம்**

**எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்**

**45**

**பேரா. கரு. நாகராசனின் பன்முகம்** :

இராமானுசரின் ஆயிரமாண்டு நினைவினையொட்டி நூல்களை இந்திரா பார்த்தசாரதி அவர்கள் கட்டுரையாகவும், நாடகமாகவும் எழுதியுள்ளார். கவிஞர் வாலி, கவிஞர் சிற்பி ஆகியோர் காவியமாகப் படைத்தளித்தனர். இவர்கள் அணியில் இக்காவியக் கவிஞரும் பேராசிரியருமான பேரா. கரு. நாகராசன் இணைகிறார். பேராசிரியர் பன்முக ஆற்றலர், கவிஞர், படைப்பாளர், பேராசிரியர், சொற் பொழிவாளர், ஆட்சி வல்லமைப் பண்பினர், மொழி மறவாத சிந்தையர், இத்தகு திறமைப் பெற்றிருக்கும் கரு. நாகராசனின் படைப்பு.

தென் தமிழ்நாட்டில் பிறப்பெடுத்துப் புறப்பட்டு வந்த செந்தமிழ் வித்தே, தடைக் கற்களையெல்லாம் படிக்கற்களாக்கிடும் இவரோ படிநிலை வளர்ச்சியால் உச்சங்களில் தன் மயற்சிக் கால் பதித்திடும் நம்பிக்கை சிகரமே, சென்னை, குருநானக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரின் போற்றுதலுக்குரிய தாய்வீடாகும். இந்தியத் திருநாட்டின் இணையில்லா இளைஞர் இயக்கமாம் நாட்டு நலப்பணித் திட்ம் மாநிலத் தொடர்பு அலுவலர் எனும் தமிழகத்தின் உயரிய பதவி நிலைப் பெருமை சூடிக்கொண்டார். இவர் எழுபத்தைந்து நூல்கள் எழுதியுள்ளார்.

எண்ணற்ற வானொலி, தொலைக்காட்சி, நாடகங்களில் எண்ணத்திற்கும் எழுத்திற்கும் இவரே வேடமிடாச் சொந்தக்காரர்.

தமிழ்நாடு அரசு தந்த விருதுகளும் பரிசுகளும் பட்டங்களும் ஏராளம். இலக்கிய சாதனைகளுக்காக கலைமாமணி விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, தமிழர் கண்ட மனம் என்ற நூலுக்கு சிறந்த பரிசு கிடைத்துள்ளது. வள்ளுவத்தில் தோய்ந்தும் தொடர்ந்தும் ஆற்றிவரும் இவர் தம் செம்மாந்த பணிக்கான பட்ட மகுடம்தான் ‘குறள் நெறித் தோன்றல்”.

இவர் இந்தியாவின பிற மாநிலத்துத் தமிழ்ச் சங்கங்கள அலைகடலுக்கு அப்பால் மலேசியா, சிங்கப்பூர், துபாய், கனடா, தைவான் ஆகிய நாடுகளின் இலக்கிய அமைப்புகள் எனத் தமிழ்கூர் நல்லுகத்தைத் தம் பயணச் சிறகுகளால் இணைத்தவர் இவரே.

**இந்து மதத்தின் பெருமை!**

**'ஆதிமதம் இந்துமதம் அற**
**உணர்வை உணர்த்திவந்த**
**நீதிமதம் நெஞ்சத்தில் ஒளியூட்டும்**
**உண்மைகளைப்**
**போதித்த சான்றோரின் புனிதமதம்; பிறமதத்தால்**
**வாதிட்ட வழக்குகளை வென்ற மதம்'**

இந்து மதமாகும். (1/9)

இந்து மதத்தின் மேன்மையினையும், கடந்து வந்த இந்து மதத்தின் பாதையும், பல்வேறு சோதனைகளை வென்று இன்றும் நின்று நிலவும் மதமாக விளங்குகிறது. பாழ்பட்ட நிலமான இந்த மண் சமயச் சான்றோர்களால் பசுஞ்சோலையாக மாறியது.

**"ஆழ்வார்கள் நாயன்மார்கள் அருட்பாதம் பட்டதனால்**
**பாழ்பட்ட நிலம்கூடப் பசுஞ்சோலை ஆனது"**

என்கிறார்.

**வைணவப் பெருநூலின் பெருமை :**

வைணவப் பெருநூலின் பெருமையாக விளக்குவது பாசுரங்கள் ஆழ்வார்களின் பாசுரத்தைப் பொருளுணர்ந்து படித்திட்டால் மனநோக்கும் மாமருந்தாகும். தீதுயின்றி தர்மநெறி தழைக்கும் மாந்தர் செவிகளிலே ஆழ்வார்களின் அமுதம் பாயும்.

வைணவம் எது, வைணவர் யார் என்பதையும் அறியலாம். பேதங்கள் எதனையுமே போற்றிடாதே பெருநெறியே வைணவும், பரம்பொருள் யாவர்க்கும் பொதுவே தான் என்று நினைப்பவனே வைணவன் ஆவான்.

**வைணவ மந்திரமே நாராயண என்னும் நாமம்தான்**
**தருமமே வென்றிட அதர்மமும் தோற்றிட**
**கருமமே கண்ணெனக் காட்டினான் கண்ணனே!**
**உரைத்தனன் கீதையை உணர்த்தினான் பாதையை**
**தரைமிசை மோட்சமே தரும்.** (3/2)
**கண்ணனைக் காணலாம் காதலால் துள்ளலாம்**
**கண்மணி ருக்மணி தேவியைக் காணலாம்**
**அண்ணன்பல ராமனை அவனுடன் காணலாம்**
**விண்ணவர் ஒத்திடும் விந்தையும் காணலாம்** (3/4)
**கானாறும் வேங்கடவன் புகழைப் பாடக்**
**களிப்புடனே சுனைகளில் துள்ளுகின்ற**

**மீன்களுமே திருமாலின் அருளைப் போற்ற**
**மிதந்துவரும் தென்றலவன் மகிமைகூறத்**
**தேன்சோலை வண்டினமும் பண்கள் பாடத்**
**திருமலையின் மரங்களெல்லாம் அவனை வாழ்த்த**
**நான்மறைகள் தொழுதேத்தும் புனித நாமம்**
**நாராயண நமோ என்று எங்கும் கேட்கும்.** (5/5)

மீன்கள் என்றதால் மச்சாவதாரமும், தேன் என்றதால் பாசுரமாகிய தேனும், சோலை என்பதால் குளிர்தரும் திருமாலின் அருளும், சோலை என்றதால் திருமாலிருஞ் சோலையும், வண்டினம் என்றதால் அடியவர்கள் நான்மறை ஓதுவதும்தான்.

**இராமானுசரின் பிறப்பைக் காட்டிய நலன்** :

'கப்பிய இருளைப் போக்கித் கதிரவன் கிழக்கு வானில் ஒப்பிலா மணியாய்த் தோன்றி ஒளிவெள்ளம் பாய்ச்சுதல் போல் இப்புவி மாந்தர் நெஞ்சில் இறையொளி பரவுதற்குச் செப்பரும் மகனை ஈன்றார் சீர்காந்தி மதியாம் தாயே' எனக் காப்பிய மரபிற்கு ஏற்பக் கவினுற வழங்குகிறார்.

இராமானுசன் புகழினை மண்செய்த தவத்தாலே பிறந்த மைந்தன் பவ வினைகள் பற்றாத பரிசுத்தர் கருணை பொழிகின்ற கார்முகில் நெஞ்சிலே இனித்திடும் தூயன் முதலிய தொடர்களால் சிறப்பிக்கின்றார்.

அவர் பிறந்த சூழலை வித்தான வேதத்திற்கு விளக்கமே காண்பதற்கும் சத்தான வைணவத்தைத் தரைமீதில் பரப்புதற்கும் முத்தான மகவு ஒன்று முழுமதிபோலப் பிறந்ததாக இராமானுசரைக் குறித்துச் சொல்லும்போது அவர் பிறந்ததன் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**வைணவத்தின் தத்துவங்கள்** :

குடும்ப வாழ்க்கை

**"இனியவளாய் இல்லாளும் அமைந்து விட்டால்**
**இல்லறமே சொர்க்கம் தான் இல்லாவிட்டால்**
**கனியிருக்கக் காய்கவர்ந்தார் செயலைப் போன்று**
**காலமெல்லாம் கண்ணீரில் மூழ்க வேண்டும்**
**மனமொன்றாக் காரணத்தால் துறவு என்னும்**
**மார்க்கத்தைத் தேடியவர் இங்கு உண்டு"**

பிடிக்காத பெண்ணோடு பெயரளவில் வாழ்தல் என்பது கொடிய பாம்போடு கூடி வாழ்தல் என்று குடும்ப வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறது.

வாழ்க்கை நிலையாமை :

**"பிறந்தவர்கள் எல்லோரும் இறந்திடவே கூடும்**
**கறங்குவதும் சுழல்வதுபோல் அமைந்தததுதான் வாழ்க்கை**
**உறங்குவதும் விழிப்பதும் இறப்புப் பிறப்பெற்று**

**உணர்வதை வைணவம் விளக்குகிறது.**

மாந்தர்களின் பிறப்பையும் இறப்பையும் வைணவமும் சுட்டிக் காட்டுகிறது இக்காவியத்தில்,

பூவிரிந்து சிந்திய தேன் புனலோடு கலககின்ற புகழின் மிக்க காவிரி என்றும் முட்டு வான் இமயத்தின் மீதிருந்து பூமியினைத் தொட்ட மகள் கங்கையெனும் தூயமகள் என்றும் காவிரிணையும் கங்கையும் வாழ்கைக்கு ஒப்பிடுகிறார்.

"எட்டாத உயரத்தில் இருப்பவரும் முடிவினிலே கட்டாயம் மண்மாதாவின் மடியிறங்கும் காட்சியை மனித வாழ்கைக்கு ஒப்பிட்டுள்ளார்.

**பெண் உரிமை** :

பொன்னாச்சி மடத்தில் பணி செய்வதற்குச் சீடர்கள் இசையவில்லை. அவள் தாழ்குலத்தைச் சார்ந்தவராதலால் தீட்டு நேரும் எனச் சீடர்கள் சொல்ல இராமானுசர், பெண் உரிமை பேசுகிறார்.

**இருவிழிகள் தனைக்குத்தி இருட்படல மாக்கிவிட்டு,**

**குருடியெனக் கூறுதல்போல் குலவிளக்கம் பெண்களது**

**உரிமைகளைப் பறித்துவிட்டு உதாசீனம் செய்வதுயேன்**

**திருந்திடுவீர் இனியேனும் சிந்தனையில் தெளிவு பெற்று**

என அறிவுறுத்துவதும் பெண் உரிமையேனும் பெருந்தகை உள்ளத்தில் காணமுடிகிறது.

**பொதுமைப் பண்பு** :

திருக்கோட்டியீர் நம்பியிடம் தாம் பல நாட்கள் நடந்து பணிந்து வேண்டிக் கற்றார் நாராயண மந்திரத்தை மோட்சம் தரும் அம்மூலமந்திரத்தைப் பாமரருக்குச் சொன்னால் நரகத்திற்குச் செல்வோம் என்று குரு சொல்ல அதனை ஏற்காத இராமானுசர்,

**ஒருவன் நான் மந்திரத்தை உச்சரிப்ப தாலே,**

**அரிய சொர்க்கம் அடைவதிலே ஆர்வமில்லை**

**பெருமளவில் சொர்க்கத்தை ஊரார்**

**அடைந்திட்டால் யானும்**

**நரகத்தை அடைவதற்கும் நாட்டமுள்ளேன்**

என்றும் கோபுரத்தின் மேல் ஏறி பாமரர்களுக்கும் மந்திரத்தைக் கூறினார். அனைவரும் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும் என்பதையே இராமானுசரின் பொதுமைப் பண்பைக் காட்டுகிறது.

**தீண்டாமை என்னும் வேண்டாமை** :

தீண்டாமை என்னும் வேண்டாமையை உரத்தச் சிந்தனையில் ஒலித்துத் தாழ்ந்த இன மக்களின் வாழ்வில் சமூக நீதியை முன்னெடுத்துச் சென்ற எதிராசராகிய இராமானுசர்.

இராமானுசரின் புகழுக்குக் காரணமானது தீண்டாமை எதிரான கொள்கைப் பாடு. வைணவராக இருந்து அதனை மேற்கொண்டது ஓர் அரிய செயல். தீண்டாமையை வெறுப்பதன் மூலம் மதத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய மகான் ஆவார். அவரது வாழ்க்கையில் சோதனைகள் ஏற்பட்டபோது தாழ்த்தப்பட்டோர் அவரைத் தாங்கிப் பிடித்தனர். அந்நிகழ்வுகள் அவரைப் பாதிக்கச்

செய்தன. தொட்டாலே தீட்டு என்ற நிலை நிலவிய காலகட்டத்தில் அவர் வன்மையாகத் தீண்டாமை உணர்வை அடியோடு களைய முற்பட்டார்.

தீண்டாமை வேருக்கு வெந்நீரை விரைவினிலே ஊற்றிடுவேன். ஒரு பிள்ளை கோயிலுக்குள் மறுபிள்ளை வீதியிலே இருவேறு நிலைமையினை ஏற்கின்ற தெய்வம் உண்டோ என்று சொன்னவர் அவர். சேரி சிறுவர்களுக்குப் பூணூல் அணிவித்துப் புரட்சி செய்தார். காட்டுத் தீ பரவுதல்போல் உயர் சாதி இந்துக்கள் வீட்டுக்குள் விவகாரம் பரவியது. பக்திநெறிப் பணியாற்றும் அந்தணர்கள் முதலாகச் சத்திரியர்கள், வேளாளர்கள், வைசியர்கள் உள்ளிட்ட அத்தனைப் பிரிவினரும் அடாத செயல் நடந்ததென மொத்தமாய் எதிர்த்தார்கள்.

தாழ்த்தப்பட்ட சமகத்தினருக்கு உயர்வு சேர்க்கும் உயரிய நோக்குடன் அவர்களெல்லாம் பெருமானின் பிள்ளைகள் என்பதைக் குறிக்கும் விதத்தில் “அரிசன்” என அழைத்தார் அண்ணல் காந்தி. ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அம்மக்களை “திருக்குலத்தார்” என்று சிறப்பித்த பெருமை மகான் இராமானுசருக் குண்டு.

வேதம் என்பது உயர் பிறப்பினருக்கு மட்டுமே உரியது என்று நெடுங்காலமாக நிலவிய விதியை மாற்றி, மானுடராகப் பிறந்த எல்லோருக்கமே அது உரியது என்று, கீழ்த்தட்டு மக்களுக்கும் வேதத்தைப் போதித்த வித்தகர் அவர். வைணவத்தை இவ்வையகத்தே நிலை நிறுத்தி நீங்காப் புகழ் பெற்ற அவர் மொழியைக் கடக்கும் பெரும் புகழார். மானுடப் பழியைக் கடக்கும் பக்திப் பாலம் அமைத்திட்ட அற்புதர். பேதமில்லாமல் எல்லா உயிர்களிலும் பகவானைக் கண்ட மனிதாபிமானி மகான் இராமானுசர்.

**துணை செய்த நூல்கள்** :

1. இராமானுஜ நூற்றந்தாதி – திருவரங்ககத்த முதனார்.
2. அற்புதர் இராமானுசர் (நாடகம்) – 10ஆம் வகுப்பு தமிழ்ப் புத்தகம், டி.பி. இராமானுஜம்
3. இராமானுஜ தயா – ஆயிரமாவது திருநட்சத்திர மலர் தொகுப்பாசிரியர் – நாவல் பாக்கம், ஸ்ரீ.உ.வே.வாசுதேவதாதாசார்யார்.
4. இராமானுச மாமுனிவர் காவியம் – பேராசிரியர் கரு. நாகராஜன், வானதி பதிப்பகம்.
5. வடுகநம்பி இயற்றிய ஸ்ரீ யதிராஜ வைபவம், பிங்கள ஸம்வத்ஸர்மலர், கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் – 1976.